# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## செய்திக்குறிப்பு

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் 04.07.2018 அன்று வனப் பயிற்சியாளர் (Forest Apprentice) என்ற பதவிக்கு அறிவிக்கை (எண்: 12/2018) வெளியிட்டிருந்தது. அதற்கான தேர்வுகள் 23.09.2018 முதல் 30.09.2018 வரை நடத்துவதாக அறிவித்திருந்தது.

மேற்கண்ட நாட்கள், மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் (UPSC) மற்றும் பிற தேர்வு நடத்தும் அமைப்புகள் நடத்தும் தேர்வு நாட்களை கருத்தில் கொண்டு கவனமுடன் முடிவு செய்யப்பட்டன

இந்நிலையில், மத்திய அரசுப்பணியாளர் தேர்வாணையம் 28.09.2018, 29.09.2018, 30.09.2018, 06.10.2018 மற்றும் 07.10.2018 ஆகிய ஐந்து நாட்கள் குடிமைப்பணிகளுக்கான முதன்மைத் தேர்வு நடத்துவதாக அறிவித்துள்ள நிலையில் விண்ணப்பதாரர்களின் நலன் கருதி, வனப் பயிற்சியாளர் (Forest Apprentice) பதவிக்கான தேர்வினை, 09.10.2018 முதல் 16.10.2018 வரை நடத்தலாம் என முடிவு செய்து அதற்கான அறிவிக்கை தேர்வாணயத்தின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

செயலாளர்
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்